க.பொ.த. (உயர் தரம்)

# பொருளியல் I

Channel NIE

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை - 2022

## புள்ளி வழங்கும் திட்டம்

பத்திரம் 01

| வினா இலக்கம் | விடை இலக்கம் | வினா இலக்கம் | விடை இலக்கம் | வினா இலக்கம் | விடை இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 2 | 18 | 4 | 35 | 2 |
| 02 | 4 | 19 | 2 | 36 | 1 |
| 03 | 4 | 20 | 4 | 37 | 5 |
| 04 | 5 | 21 | 4 | 38 | 3 |
| 05 | 1 | 22 | 3 | 39 | 2 |
| 06 | 5 | 23 | 2 | 40 | 1 |
| 07 | 2 | 24 | 4 | 41 | 4 |
| 08 | 3 | 25 | 2 | 42 | 3 |
| 09 | 5 | 26 | 2 | 43 | 2 |
| 10 | 3 | 27 | 3 | 44 | 3 |
| 11 | 4 | 28 | 5 | 45 | 4 |
| 12 | 2 | 29 | 2 | 46 | 4 |
| 13 | 4 | 30 | 4 | 47 | 5 |
| 14 | 3 | 31 | 2 | 48 | 3 |
| 15 | 4 | 32 | 3 | 49 | 2 |
| 16 | 4 | 33 | 1 | 50 | 4 |
| 17 | 2 | 34 | 5 | | |

க. பொ.த உயர் தரம்

# பொருளியல் II

Channel NIE

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடி பரீட்சை-2022

பொருளியல் -11 நேரம்:- மூன்று மணித்தியாலங்கள்

## புள்ளி வழங்கும் திட்டம்

## இரண்டாம் பகுதி

1.

I. பொருளியலின் அடிப்படையில் இயற்கை வழங்களை இரண்டாகப் பிரிக்கலாம்.
1. மீள உருவாக்கக் கூடிய வளங்கள் 2. மீள உருவாக்க முடியாத வளங்கள்


மீள உருவாக்கக்கூடிய வளங்கள் என்பது பயன்பாட்டின் போது தேய்விற்குட்படாத வளங்களாகும். அவை மீண்டும் மீண்டும் உருவாகுவதுடன் திரும்பவும் பயன்பாட்டிற்கு உட்படுத்தலாம். (1 புள்ளி)
உதாரணமாக காட்டு வளங்கள், கடலில் உள்ள மீன்கள் (1 புள்ளி)

மீள உருவாக்க முடியாத வளங்கள் என்பது பயன்பாட்டின்போது தேய்விற்கு உட்படுவதுடன் அவை மீண்டும் உற்பத்தி செய்ய முடியாத வளங்களாகும். (1 புள்ளி)
உதாரணமாக கனிய எண்ணெய், நிலக்கரி, இயற்கை வாயு (1 புள்ளி)

II. எல்லையற்ற விருப்பங்களுடன் ஒப்பிடும் போது பொருளாதாரமானது உடமையாக கொண்டுள்ள வளங்களானது பற்றாக்குறையாக இருப்பதே அருமை எனப்படும்.

- பொருளாதாரத்தினுள் உடைமையாக கொண்டுள்ள வளங்களானது வினைத்திறனாகவும் உத்தம மட்டத்திலும் உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படுகின்ற பண்ட சேர்க்கையினை உற்பத்தி சாத்திய வளையியானது காட்டும்
- இப்பண்ட சேர்க்கையினை மிகைத்துச் செல்லும் நிலைமையினை அருமையின் மூலம் காட்டப்படும். இதன்படி உற்பத்தி சாத்திய வளையியிற்கு வலப்புறமாக காணப்படும் புள்ளியின் மூலம் அருமை காட்டப்படும். வரைபில் A புள்ளியினால் அருமை தன்மை காட்டப்பட்டுள்ளது. (1 புள்ளி)
- அருமையின் காரணமாகவும் அருமையான வளங்களின் மாற்றுப் பயன்பாடு காரணமாகவும் ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கு பல்வேறான மாற்று வழிகளில் ஒன்றை மட்டுமே தெரிவு செய்வதே தெரிவு என அழைக்கப்படும்.
- உற்பத்தி சாத்திய வளையியின் மீது அமைந்துள்ள புள்ளியின் மூலம் தெரிவைக் காட்டலாம். வரைபடத்தில் B,C புள்ளிகளால் தெரிவு என்ற விடயம் காட்டப்பட்டுள்ளது. (1 புள்ளி)
- மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையில் ஒன்றைத் தெரிவு செய்யும் போது இழக்கப்படும் அடுத்த மிகச் சிறந்த மாற்றுப் பயன்பாட்டின் பெறுமதியே அமையச் செலவாகும்.

- உற்பத்தி சாத்திய வளையியில் இரண்டு புள்ளிகளுக்கிடையிலான இடைவெளியானது அமையச் செலவைக் காட்டும், இந்நிலையில் ஒரு பண்டத்தின் உற்பத்தியை அதிகரிக்கும் போது இன்னுமொரு பண்டத்தின் உற்பத்தியைக் குறைக்க வேண்டும். வரைபடத்தில் நிழலிடப்பட்ட பகுதியினால் அமையச் செலவு காட்டப்படுட்டுள்ளது. (1 புள்ளி)




(1 புள்ளி)

III. மனித மூலதனம் என்பது குறித்தவொரு நபர் ஏதாவதொரு தொழிலில் விளைதிறனை அதிகரிப்பதற்கு உதவக்கூடிய கல்வி, பயிற்சி, அனுபவம் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவு, ஆற்றல், சமூக மற்றும் ஆளுமை பண்புகளாகும். (1 புள்ளி)

I. மனித மூலதனத்தை உயர்த்துவதற்கு பல்வேறான நடைமுறைகள் காணப்படுகின்றன

- கல்வியையும் பயிற்சியையும் வழங்குதல்
- சுகாதார போசனைத் திட்டங்களை வலுப்படுத்துதல்
- நவீன தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தலும், முன்னேற்றமடையச் செய்தலும்.
- பௌதீக மூலதனத்தை உயர்த்துதல்
- ஊக்குவிப்புக்களை வழங்குதல்
- தொழில்களுக்கிடையில் சுமூகமான அமைப்பில் தொடர்புகள் காணப்படுதல்.

(ஒரு விடயத்திற்கு 1 புள்ளி வீதம் 3 விடயங்களுக்கு 3 புள்ளிகள்)

IV. அடிப்படை பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறான சமூகங்களால் தயாரிக்கப்பட்ட நிறுவன ரீதியான ஒழுங்கமைப்பே பொருளாதார முறையாக கருதப்படும். (1 புள்ளி)

i. வளங்களைப் பங்கீடு செய்வது தொடர்பாக தீர்மானம் எடுத்தலும் அத்தீர்மானங்களை தொடர்புபடுத்தும் பொறிமுறையும்.
ii. உற்பத்தி வளங்கள், சொத்துக்கள், தொடர்பான உடைமையும் சொத்துரிமையும்
iii. பொருளாதாரத்தில் தீர்மானங்களை மேறகொள்ளும் அலகுகள் மீது தாக்கம் செலுத்தும் ஊக்குவிப்பு முறைமைகள்.
iv. அரசியல் பொருளாதார கண்ணோட்டங்கள்
v. வருமான மீள் பங்கீடும், சமூக பாதுகாப்பு வலையமைப்பும். (3 புள்ளிகள்)

V. பொருளாதார வினைத்திறன் என்பது பொருளாதாமொன்று உடைமையாக கொண்டுள்ள வளங்களை நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதாகும்.

உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள புள்ளியில் பொருளாதாரம் ஒன்று செயற்படுவதை கொண்டு பொருளாதாரமானது பொருளாதார வினைத்திறனை அடைந்துள்ளது என கூற முடியாது (1 புள்ளி)

பொருளாதார வினைத்திறனை அடைவதற்கு நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகள் இரண்டாகும். அவை

1 உற்பத்தி வினைத்திறன்

2. வள ஒதுக்கீட்டிலான வினைத்திறன் (1 புள்ளி)

உற்பத்தித் வினைத்திறன் என்பது பொருளாதாரத்தில் உள்ளீடுகளின் மூலம் உத்தம வெளியீட்டை பெற்றுக் கொள்வதாகும். இதனை அடைவதற்கு இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்

1. நிறை தொழில் மட்டம்

2. பூரண உற்பத்தி

உற்பத்தி சாத்திய வளையியின் மீது அமைந்துள்ள புள்ளியானது பொருளாதாரத்தில் உற்பத்தி வினைத்திறன் ஏற்பட்டுள்ளது என்பதைக் காட்டும். (1 புள்ளி)

வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் என்பது சமூக விருப்பத்திற்கு ஏற்ப பண்டங்களை அல்லது சமூகத்தினால் மிகவும் விரும்பக்கூடிய பண்ட உற்பத்திக்காக பொருளாதாரமானது உடைமையாகக் கொண்டுள்ள அருமையான வளங்களை பயன்படுத்துவதாகும்.

வுள ஒதுக்கீட்டிலான வினைத்திறன் ஏற்படும்போது விலையானது எல்லை செலவுக்கும், எல்லை நலனுக்கும் சமப்படுத்தல் வேண்டும். (P=MC=MB)

இதன்படி பொருளாதார வினைத்திறன் உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள ஒரே ஒரு புள்ளியின் மூலம் மட்டுமே அடைய முடியும். இதனால் உற்பத்தி சாத்திய வளையியின் மீது ஒரு பொருளாதாரமானது செயற்படுவதைக் கொண்டு பொருளாதாரமானது வினைத்திறனை அடைந்துள்ளது என கூற முடியாது.

(1 புள்ளி)

2.

I. ஏனைய காரணிகள் நிலையாக இருக்கையில் (மாற்றமின்றி இருக்கையில்) குறித்த பண்டத்தின் விலைக்கும் கேள்வி தொகைக்கும் இடையே காணப்படுகின்ற எதிர் கணிய தொடர்பினை கேள்வி விதி என வரைவிலக்கணப்படுத்தலாம். (1 புள்ளி)

கேள்வி சார்பில் உள்ளடக்கப்படுகின்ற காரணிகளின் அடிப்படையில் கேள்வி விதியில் நிலையாக காணப்படுபவை எனக் கருதப்படும் விடயங்கள்


- தொடர்புடைய பண்டத்தின் விலை
- நுகர்வோன் வருமானம்
- நுகர்வோன் சுவை

- எதிர்பார்க்கை
- நுகர்வோர் எண்ணிக்கை
- ஏனைய காரணிகள் என்பவையாகும்

(ஒரு காரணிக்கு 1 புள்ளி வீதம் 3 காரணிகளுக்கு 3 புள்ளிகள்)

II. ஏனைய காரணிகள் நிலையாக காணப்படும் போது பண்டமொன்றின் விலையானது மாற்றமடையும் சதவீதத்தை விட குறைந்த சதவீதத்தினால் நிரம்பல் தொகையானது மாற்றமடையும் போது நெகிழ்வற்ற நிரம்பல் தோன்றும் (2 புள்ளி)

நெகிழ்வற்ற நிரம்பல் காணப்படும் பண்டடமொள்றின் நிரம்பல் வளையியானது தொகையச்சின் ஊடாக செல்லும்




(1 புள்ளி)

நெகிழ்வற்ற நிரம்பலைக் கொண்டுள்ள பண்டமொன்றின் நிரம்பல் வளையியின் குத்தச்சு வெட்டுத் துண்டானது எதிர்க்கணிய (-) பெறுமதியைக் கொண்டிருக்கும் இதன்படி நிரம்பல் சமன்பாடானது (Qs= -a+bp) ஆகும்.

தொகையச்சை ஊடறுத்துச் செல்லும் நெகிழ்வற்ற நிரம்பல் வளையியின் நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதியானது எப்போதும் ஒன்றைவிட குறைவான பெறுமதியைக் கொண்டிருக்கும்.

III. அரிசிக்கு நெகிழ்வற்ற கேள்வி காணப்படுவதனால் விலை அதிகரிக்கும்போது உற்பத்தியாளர் வருமானமும் உயர்வடையும். ஆனாலும் கணணிக்கு நெகிழ்வுடைய கேள்வி காணப்படுகின்றது. இதனால் கணனியின் விலையை உயர்வடையச் செய்தால் உற்பத்தியாளர் வருமானம் குறைவடையும். இதனால் உற்பத்தியாளர் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் அரிசியின் விலையை மட்டுமே உயர்த்துதல் வேண்டும். (4 புள்ளிகள்)

IV. கேள்வி சமன்பாடு - $Qd = 52-4p$

நிரம்பல் சமன்பாடு - $Qs = 18+6p$

அ. $Qd = Qs$

$52-4p = -18 + 6p$

$52+18 = 6p + 4P$

$70 = 10p$

$70/10 = p$

$7 = p$

$Qd = 52 – 4p$ $Qs = -18 + 6p$

$52- 4x7$ $-18 + 6 \times 7$

$52-28$ $- 18 + 42$

$= 24$ $= 24$

சமநிலை விலை ரூபா = 7 (1 புள்ளி)

சமநிலைத் தொகை = 24 அலகுகள் (1 புள்ளி)

ஆ. சமநிலையின் போது கேள்வி நெகிழ்ச்சி

$Ed = -b \times P/Q$

$= -4 \times 7/24$

$= -1.166$ (1 புள்ளி)


சமநிலையின் போது நிரம்பல் நெகிழ்ச்சி

$Ed = b \times P/Q$

$= 6 \times 7/24$

$= -1.75$ (1 புள்ளி)

V. எரிபொருட்களின் விலை குறைவடையும் போது எரிபொருளுக்கான கேள்வி தொகை அதிகரிக்கும். இது கேள்வி கோட்டின் வழியே A இலிருந்து B வரை செல்கிறது. எரிபொருளும் வாகனங்களும் நிரப்புப் பண்டங்கள் ஆகும் இதனால் வாகன இறக்குமதி வரையறுக்கப்படும் போது எரிபொருளுக்கான கேள்வியானது D இலிருந்து $D_1$ ஆக குறையும். எரிபொருள் நிரம்பலானது நிலையாக காணப் படுகையில் எரிபொருளுக்கு கேள்வி குறைவடையும் போது ஆகக்குறைவடைந்த விலையின் கீழேயே சந்தை தொகையானது $Q_1$ இருந்து Q வரை குறைவடையும்
(2 புள்ளிகள்)





(2 புள்ளிகள்)

3

I. முட்டைக்கு உயர்ந்த விலையை விதிப்பதன் பொருளாதார பாதிப்புகள்

- மிகைக் கேள்வியினால் சந்தையில் பொருள் பற்றாக்குறை தோன்றுதல்
- சட்டரீதியற்ற கருப்புச் சந்தை விலையின் கீழ் பண்டத்தை விநியோகிப்பதற்கு வியாபாரிகள் முயற்சி செய்தல்
- கருப்பு சந்தையின் விலையின் காரணமாக முன்னர் காணப்பட்ட சமநிலை விலையைவிட உயர்ந்த விலைக்கு பண்டத்தை விநியோகித்தல்
- உச்ச விலையுடன் உற்பத்தியாளர் இலாபம் வரையறுக்கப்படும் உற்பத்தி துறையில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள் வரையறுக்கப்படுதல்.
- உச்ச விலை காரணமாக நுகர்வோர் மிகை உற்பத்தியாளர் மிகையில் பாதிப்பு ஏற்பட்டு சமூக நலனிலும் பாதிப்பு ஏற்படுதல் (3 புள்ளிகள்)

II. படம்




(2 புள்ளிகள்)

நுகர்வோனை விட கூடுதலான வரிச்சுமையை உற்பத்தியாளர் ஏற்பார்.

(2 புள்ளிகள்)

III.

a) Qd = Qs

250-2p = -60 + 3p

- 2p – 3p = -60 – 250

-5p/-5 = -310 / -5


சமநிலை விலை P = 62 ரூபா

Qd = 250 – 2x62

= 250 – 124

சமநிலைத் தொகை = 126 அலகுகள்

(2 புள்ளிகள்)




Qd =250-2x80

=250-160

= 90

Qs = -60+3x80

= -60 +240

= 180 (1 புள்ளி)

Qd = 250-2p

180 = 250 – 2p

2p = 250-180

2p/2 = 70/2

p = 35 (1 புள்ளி)

b)

- மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதற்கான அரசின் செலவு = உத்தரவாத விலை X அரசு கொள்வனவு செய்த அளவு

  = 80 x 90

  = 7200 ரூபா (1 புள்ளி)

- குறை நிரப்புக் கொடுப்பனவு = விலை ஆதரவு X தொகை

  = (80-35) X 180


  = 8100 ரூபா (1 புள்ளி)

சமூக நலன் நட்டம் = 7200 - 810 = 6390 (2 புள்ளிகள்)

சமூக நலன் இழப்பு என்பது சந்தையில் தோன்றும் மிகை உற்பத்தியின் போது குறை உற்பத்தியின் போதும் வளப்பகிர்வானது வினைத்திறனற்றதாக அமைவதாகும்.

சமூக நலன இழப்பு = (80-35) x (180-126) x 1/2 = 1215

IV.




V. (சரியான வரைபிற்கு 02 புள்ளிகள்)

- நெகிழ்வற்ற நிரம்பல் நெகிழ்வற்ற கேள்வியும் காணப்படும் விவசாயப் பொருட்களுக்கு பெரும்பாலும் பாரியளவிலான விலைத் தலம்பல்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதனால் சில காலங்களில் நிரம்பல் அதிகரித்து விலை குறையும்போது ( P1 இருந்து P2) விலையை உறுதியாக பேணும் செயற்பாடாக மிகை இருப்பை Q2 இருந்து Q1 வரை) அரசு கொள்வனவு செய்வதும் நிரம்பல் குறைவடையும் காலத்தில் பாதுகாத்த இருப்பை விடுவிப்பு செய்வதன் மூலமும் (Q3 இருந்து Q1) விலையினை P1 என்ற மட்டத்தில் நிலையாக வைத்திருக்க முயற்சிப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை பெருமளவிலான தளம்பலுக்கு உட்படுத்தாது ஒரு நிலையான மட்டத்தில் வைத்திருப்பதற்கு அரசாங்கத்தினால் செயற்படுத்த முடியும். ஆனாலும் இங்கு கொள்வனவு செய்ய வேண்டிய அளவு விடுவிப்பு செய்ய வேண்டிய அளவு தொடர்பாக அரசாங்கத்திற்கு சரியான அனுபவம் இல்லாவிட்டால் சந்தையில் காணப்படும் உண்மையான விலையை விட மாறுபட்ட விலை தோன்றலாம். (1 புள்ளி)

- ❖ உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற தொழில்நுட்ப ரீதியான தொடர்பு உற்பத்தி சார்பு என அழைக்கப்படும்

குறுங்காலத்தில் மாற்றப்படக்கூடியது மாறும் காரணிகள் மட்டும் ஆகையால் குறுங்கால உற்பத்தி சார்பு கீழ்வருமாறு காட்டப்படும்


$Q = F (L_1,L_2,L_3........L_n , K)$

உற்பத்தி செயற்பாட்டிற்குரிய சகல மூலப்பொருட்களும் மாற்றப்படும்போது உள்ளீடு மற்றும் வெளியீட்டுக்கிடையில் காணப்படும் தொடர்பு கீழ்வருமாறு நீண்டகால உற்பத்திச் சார்பின் மூலம் காட்ட முடியும்

$Q = F (L_1,L_2,L_3........L_n , K_1 , k_2 ,K_3 , .......K_n)$

(4 புள்ளிகள்)

ii




- ❖ குறுங்காலத்தில் நிலையான காரணி களுடன் மாறும் காரணிகளையும் அதிகரித்து உற்பத்தியை மேற்கொள்ளும் போது சராசரி உற்பத்தியை விட எல்லை உற்பத்தியானது அதிகரித்த வேகத்தில் அதிகரிப்பதுடன் சராசரி மாறும் செலவை விட அதிகரித்த வேகத்தில் எல்லை செலவு குறையும் (அதிகரிக்கும் எல்லை விளைவு)

- ❖ சராசரி உற்பத்தியானது உச்ச நிலையினை அடையும் போது எல்லை உற்பத்தியானது அந்த உச்சப் புள்ளியினூடாக கீழ்நோக்கி செல்வதுடன் அந்நிலையில் சராசரி மாறும் செலவின் மிகக்குறைந்த புள்ளியிலிருந்து எல்லை செலவானது மேல்நோக்கி செல்லும்

(சரியான வரைபிற்கு 2 புள்ளிகள்)

- ❖ குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி செயற்படும் போது சராசரி விளைவை விட கூடிய வேகத்தில் எல்லை விளைவு குறைவதுடன் சராசரி மாறும் செலவை விட கூடிய வேகத்தில் எல்லை செலவு அதிகரிக்கும்.
- ❖ குறுங்கால உற்பத்தி கோடுகளின் (AP , MP) பிரதி பிம்பமே குறுங்கால செலவுகள் ஆகும். இதன்படி உற்பத்திக்கோடுகள் சரிவடைந்த ஆங்கில U எழுத்து வடிவத்தை பெறுவதுடன் செலவுக் கோடுகளானது U எழுத்து வடிவத்தை பெறும் (ஒரு ஒப்பீட்டுக்கு இரண்டு புள்ளி என்ற படி 4 புள்ளிகள்)


III. அதிகரிக்கும் அளவு திட்ட விளைவானது நீண்டகால உற்பத்தியில் (விளைவில்) காணப்படும் ஒரு நிலைமையாக இருப்பதுடன் அளவுத்திட்ட சிக்கனமானது நீண்டகால செலவுடன் தொடர்புடைய எண்ணக்கருவாகும்

| அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு தோன்றுவதற்கான காரணங்கள் | அளவுத்திட்ட சிக்கனம் தோன்றுவதற்கான காரணங்கள் |
|---|---|
| • தொழிற் பகுப்பினை மேற்கொள்ளும் ஆற்றலின் காரணமாக<br>• பாரியளவிலான இயந்திர உபகரணங்களை பயன்படுத்தும் ஆற்றலின் காரணமாக<br>• ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் மேற்கொள்ளக்கூடிய செலவு காணப்படுதல்<br>• உற்பத்தி காரணிகள் பிரிபடாத்தன்மை<br>(1x2 = 2 புள்ளிகள்) | • முகாமைத்துவ சிக்கனம்<br>• தொழில்நுட்ப சிக்கனம்<br>• வினியோக சிக்கனம்<br>• ஆபத்துக்களை தாங்குவதனால் ஏற்படும் சிக்கனம்<br>(1x2 = 2 புள்ளிகள்) |

| **நிறைபோட்டிச் சந்தை** | **தனியுரிமை போட்டிச் சந்தை** |
|---|---|
| • பிரவேச சுதந்திரம் காணப்படும்<br>• உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை பெருமளவு ஆகும்<br>• குறுங்காலத்தில் அசாதாரண இலாபத்தையும் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தையும் உழைக்கும் | • பிரவேச சுதந்திரம் காணப்படும்<br>• உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை பெருமளவு ஆகும்<br>• குறுங்காலத்தில் அசாதாரண இலாபத்தையும் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தையும் உழைக்கும் |

(ஒரு ஒப்பீட்டுக்கு இரண்டு புள்ளி என்ற படி 2 X 2 = 4)

V.




(சரியான வரைபிற்கு 2 புள்ளிகள்)

நிறுவனமொன்றின் உத்தம வெளியீட்டை தீர்மானிக்கும் நிபந்தனைகளில் ஒன்று MR=MC ஆகும் இங்கு MR>MC க்கு கீழாக அமைந்துள்ள வெளியீட்டு மட்டமானது Q3 போன்ற மட்டத்தை தாண்டிய நிலையில் நிறுவனம் செயற்படும்போது இலாபத்தை உச்சப்படுத்தும். உத்தம வெளியீடான B புள்ளியில் காட்டப்பட்ட Q2 என்ற வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்வதற்கு Q3 இலிருந்து Q2 வரை உற்பத்தியை விரிவாக்குதல் வேண்டும். இவ்வாறு நிறுவனமானது Q2 வரை வெளியீட்டை விரிவாக்குவதற்கு காரணம் எல்லை செலவினை குறைத்து வெளியீட்டு விரிவாக்கத்தின் போது இலாபத்தில் சேரும் அளவானது படிப்படியாக அதிகரித்து B புள்ளியில் இலாபம் உச்சபடுவதனாலாகும்.

(2 புள்ளிகள்)

5.

I. பொருளாதாரத்தில் காணப்படும் மூலதன இருப்பிற்கு உற்பத்தியின் மூலம் புதிதாக சேர்க்கப்படும் மூலதனம் ஆனது மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் என அழைக்கப்படும் (1 புள்ளி)

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் பிரதான உள்ளடக்க கூறுகளாக மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம், இருப்பு மாற்றம், பெறுமதி சீராக்கம் என்பன காணப்படும். (3 புள்ளிகள்)

II. அ. மொத்த உள்நாட்டு செலவு $= C + I + G$

$= 500 + 700 + 750$

$= 1950$

ஆ. மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு செலவு + தேறிய ஏற்றுமதி

$= 1950 + 100$

$= 2050$

இ. செலவிடக் கூடிய மொத்த தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் + தேறிய வெளிநாட்டு இரண்டாம் நிலை வருமானம்

$= 2050 + 150 + 250$

$= 2450$

ஈ. தேசிய சேமிப்பு = மொத்த உள்நாட்டு சேமிப்பு + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் + தேறிய வெளிநாட்டு இரண்டாம் நிலை வருமானம்

= 800 + 150 + 250

= 1200


(1x4 = 4 புள்ளிகள்)

III. பேரினப் பொருளாதார சம நிலையை தீர்மானிக்கும் முறையை மூன்று அணுகுமுறையில் காட்டலாம் அதாவது
வருமானம் = செலவு
உட்பாய்ச்சல் = வெளிப் பாய்ச்சல்
மொத்த கேள்வி = மொத்த நிரம்பல் என்ற அணுகு முறைகள் ஆகும்

இதன்படி அரசு தலையீடு கொண்ட பொருளாதாரம் ஒன்றில் மொத்த வருமானம் ஆனது தனியார் நுகர்வு, சேமிப்பு, வரி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இவற்றுள் சேமிப்பும் வரியும் வெளிப்பாச்சல்களாகும்.

பொருளாதாரத்தில் மொத்தச் செலவின் வகையில் தனியார் நுகர்வு செலவு, அரச கொள்வனவு, முதலீட்டுச் செலவு என்பவை காணப்படும். இவற்றுள் உட்பாய்ச்சலாக அரச கொள்வனவு, முதலீட்டுச் செலவு என்பன காணப்படுகின்றன. (1 புள்ளி)

பேரினப் பொருளாதார சம நிலையில் உட்பாய்ச்சலானது வெளிப்பாய்ச்சலுக்கு சமனாகக் காணப்படும் அதனை பின்வரும் வரைபின் மூலம் காட்டலாம். (1 புள்ளி)




(1 புள்ளி)

மேலுள்ள வரைபில் உட்பாய்ச்சலானது வெளிப்பாய்ச்சலுக்கு சமப்படும் நிலைமையானது பேரின பொருளாதார சமநிலை வெளியீட்டு மட்டமாக Q வின் மூலம் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் $S+T = I + G$ ஆகும்.

(1 புள்ளி)

IV. A.

| | |
|---|---|
| • தன்னிச்சையான நுகர்வுச் செலவு என்பது வருமானத்தினால் தீர்மாணிக் கப்படாத நுகர்வுச் செலவாகும்.<br><br>• வருமானமானது பூச்சியமாக காணப்படும் போதுள்ள நுகர்வுச் செலவாகும்.<br><br>• தன்னிச்சையான நுகர்வின்போது சேமிப்பானது எதிர்கணிய பெறுமதியைக் கொள்ளும் நுகர்வு சார்பின் வெட்டுத் துண்டின் மூலம் தன்னிச்சையான நுகர்வு காட்டப்படும்<br><br>C= **a** + byd | • தூண்டப்பட்ட நுகர்வு செலவு என்பது வருமானத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப் படும் நுகர்வுச் செலவாகும்.<br><br>• துன்னிச்சையான நுகர்வு செலவை விட உயர்ந்த வருமானம் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நுகர்வு செலவாகும்.<br><br>• தூண்டப்பட்ட நுகர்வின்போது சேமிப்பானது நேர் கணிய பெறுமதியைக் கொள்ளும்<br><br>C = **a** + byd |

(இரண்டு விடயத்திற்கும் 1 புள்ளி படி 2 புள்ளிகள்)

நுகர்வு சார்பில் எல்லை நுகர்வு நாட்டத்தினதும் செலவிடக் கூடிய வருமானத்தினதும் பெருக்கத்தின் மூலம் தூண்டப்பட்ட நுகர்வுச் செலவு காட்டப்படும்.

C = **a** + byd

B.

- செலவிடக் கூடிய வருமானத்தின் மாற்றத்திற்கு ஏற்ப சேமிப்பில் தோன்றும் மாற்றமானது எல்லை சேமிப்பு நாட்டம் என அழைக்கப்படும் இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்

$$MPS = \frac{\Delta S}{\Delta YD}$$

$$\text{எல்லை சேமிப்பு நாட்டம்} = \frac{\text{சேமிப்பில் மாற்றம்}}{\text{வருமான மாற்றம்}}$$

- செலவிடக் கூடிய வருமானமானது ஒரு அலகினாள் மாற்றமடையும் போது சேமிப்பானது எத்தனை அலகுகளினால் மாற்றமடைகின்றது என்பதை இது அளவிட்டுக்காட்டும்.

(1 புள்ளி)

- செலவிடக் கூடிய வருமானத்தில் சேமிக்கப்படுகின்றன அளவானது சராசரி சேமிப்பு நாட்டமாக கருதப்படும். வருமானம் உயரும் போது சராசரி சேமிப்பு நாட்டமும் உயர்வடையும் இதனை பின்வருமாறு குறிப்பிடலாம்

$$APS = \frac{S}{YD}$$

(1 புள்ளி)

V. இப்பொருளாதாரத்தில் எல்லை நுகர்வு நாட்டமானது 0.8 ஆக இருக்கும் போது தன்னிச்சையான செலவு பெருக்கி, வரிப்பெருக்கி என்பவற்றின் அடிப்படையில் சமநிலையில் தோன்றும் மாற்றத்தை பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\Delta y = KG \times \Delta G + KT \times \Delta T$$

$$= \frac{1}{1-b} \times 100 + \frac{-b}{1-b} \times 100$$

$$= \frac{1}{0.2} \times 100 + \frac{-0.8}{0.2} \times 100$$

$$= 500 + (400)$$

$$= 100$$

(1 புள்ளி)

மேலுள்ள கணிப்பின் படி அரச கொள்வனவில் தோன்றும் உயர்வானது நேரடியாக பொருளாதாரத்தில் சமநிலை வெளியீட்டிற்கு அல்லது வருமானத்திற்கு தாக்கம் செலுத்துகின்றது என்பது தெளிவாகும். இதன்படி அரச செலவானது 100 ஆல் அதிகரித்தால் அரச செலவு பெருக்கியின் அடிப்படையில் சமநிலை வெளியீடானது 5 மடங்கால் அதிகரிக்கும்.
(1 புள்ளி)

இதனடிப்படையில் சமநிலை வெளியீட்டிலான அதிகரிப்பானது (500 − 400) 100 ஆகும்.
(1 புள்ளி)

06.

- பொது மக்களிடம் உள்ள நாணயங்களும் தாள்களும்
- வணிக வங்கிகளிடமுள்ள பொதுமக்களுக்கு உரிய கேள்வி வைப்புகள்
- வணிக வங்கிகளிடம் உள்ள பொதுமக்களுக்கு உரிய சேமிப்பு மற்றும் தவணை வைப்புகள்
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்கில் உள்ள தவணை சேமிப்பு வைப்புகளின் 50%
- வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணய வங்கி அலகில் உள்ள தவணை சேமிப்பு வைப்புகள்
- M2b = M2 + சீராக்கப்பட்ட வெளிநாட்டு சட்டமுறை பணவைப்புக்கள் அல்லது
- M2b = M2 + கடல்கடந்த வங்கிகளில் காணப்படும் குடியிருப்பாளர்களின் வெளிநாட்டு சட்டமுறை பணவைப்புகள் + உள் நாட்டு வங்கிகளில் வெளிநாட்டு சட்டமுறை பண வங்கி அலகுகளில் காணப்படும் வெளிநாட்டு சட்டமுறை பணவைப்புகளின் உள்நாட்டு பொறுப்புகள்

- பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைதல்
- வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு
- சேமிப்புக்கான ஊக்கம் குறைதல்
- கடன் வழங்கியோர் நட்டம் அடைதல்
- நிலையான வருமானம் பெறுவோர் பாதிக்கப்படல்
- நீண்டகால முதலீடுகளுக்கான ஊக்கம் குறைதல்
- பணத்துக்கான கேள்வி குறைதல்
- மெய் சொத்துக்களுக்கான கேள்வி அதிகரித்தல்
- வளப்பாவனையின் வினைத்திறன் குறைதல்
- சப்பாத்து தோல் செலவும் பற்றுச்சீட்டு செலவும் அதிகரித்தல்

(1 புள்ளி வீதம் 4 புள்ளிகள்)

- மெய் வருமானம்
- நிதி முறையில் நவீனத்துவம்
- வட்டி வீதம்
- நிறுவனம் சார் காரணிகள்
- எதிர்கால விலை எதிர்பார்க்கிறார்கள் (1x4 புள்ளிகள்)

- அ. அத்தியாவசிய ஒதுக்குகள் = வைப்புகள் x சட்டரீதியான ஒதுக்கு வீதம்
  = 2000 X 10/100
  = 200 (1 புள்ளி)

  மிகை ஒதுக்குகளின் அளவு = 500-200=300 (1 புள்ளி)


  ஆ. மொத்த கடன் அளவு = மேலதிக வைப்பு அளவு x வைப்பு பெருக்கி
  = 300 x 1 / 10%
  = 300 x 10 = 3000 (2 புள்ளிகள்)

V.

- குறுங்கால மற்றும் நீண்ட கால நிதி சொத்துக்கள் பரிமாற்றப்படும் சந்தையானது நிதிச் சந்தை என அழைக்கப்படும். இது பிரதானமாக இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படும். (2 புள்ளிகள்)
- அதாவது பணச் சந்தையும், மூலதன சந்தையும் ஆகும்.
- குறுங்கால சொத்துக்கள் பரிமாற்றப்படும் சந்தை பணச் சந்தை என அழைக்கப்படும். (1 புள்ளி)
- நீண்டகால சொத்துக்கள் பரிமாற்றப்படும் சந்தை மூலதன சந்தை என அழைக்கப்படும். (1 புள்ளி)

7.

I. நுகர்வில் நேர் வெளிவாரி விளைவு என்பது பண்டம் அல்லது சேவை ஒன்றை நுகர்வின் போது அதற்கு வெளியே உள்ள மூன்றாம் குழுவினர் பெறும் நன்மையாகும்.
இது நுகர்வில் நேர் கணிய வெளிவாரி விளைவாக காட்டப்படும்.
இதனை பின்வரும் வரிப்படம் மூலம் விளக்க முடியும். (1 புள்ளி)



மேலுள்ள வரைபடத்தின் படி பண்டத்தின் உற்பத்தி மட்டம் $Q_p$ ஆகும். நேர் கணிய வெளிவாரி விளைவு காணப்படுவதனால் உத்தமமான உற்பத்தி மட்டம் Qs ஆக இருக்க வேண்டும்.

அதன்படி இதனால் விளங்குவது சமூகத்துக்கு கிடைக்கும் நலன் தனிப்பட்ட முறையில் கிடைக்கின்ற நலனை விட உயர்ந்த பெறுமதியை பெறும்போது (MBP< MSB)

அப்பண்டத்தின் உற்பத்தியை நோக்கி உத்தமமான வளப்பங்கீடு ஒன்று இடம் பெறவில்லை என்பதாகும். குறைவான வளப்பயன்பாடு இடம்பெற்றுள்ளது அல்லது வளப்பங்கீட்டில் செயற்றிறனின்மை காணப்படுவது இங்கு தெளிவாகின்றது. (1 புள்ளி)

II. பொதுப் பண்டம்

- நுகர்வில் போட்டித்தன்மை காணப்படாத நுகர்விலிருந்து விலக்கப்பட முடியாத பண்டங்கள் ஆகும். (1 புள்ளி)
  உதாரணமாக வீதி வெளிச்சம் கலங்கரை விளக்கம் (1 புள்ளி)

பொது வளங்கள்

- நுகர்வில் போட்டித்தன்மை காணப்படுகின்ற நுகர்வில் இருந்து விலக்கப்பட முடியாதவையாகும். (1 புள்ளி)
  உதாரணமாக பொது புல்வெளிகள், ஆறுகள், நீர்த்தேக்கங்களும் மீன் வளங்கள், காடுகள் (1 புள்ளி)

III. நல்ல வரி ஒன்றின் இயல்புகளாவன

- நியாயத்துவம் - குத்தான மற்றும் கிடையான நியாயத்துவம்
- செயற்றிறன்
- நிச்சயத்தன்மை
- எளிமைத்தன்மை
- சிக்கனத்தன்மை
- நெகிழ்வுத்தன்மை

(1 புள்ளி வீதம் 4 புள்ளிகள்)

IV. பொருளாதாரத்துக்கு பொது பண்டங்களை வழங்கும் போது அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை மிகவும் வெற்றிகரமாக்கிக் கொள்ளும் நோக்கில் தனியார் துறையின் உதவியை பெற்றுக் கொண்டு செயற்படும் வேலைத்திட்டங்கள் அரச தனியார் பங்குடமை ஆகும். (1 புள்ளி)

- நுரைச்சோலை அனல் மின் நிலையம்
- கொழும்பு துறைமுகத்தில் தென் கொள்கலன் இறங்குதுறை
- அதிவேகப் பாதை (1 புள்ளி)

- **நன்மைகளாவன**
- உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அடைதல்
- பொருளாதார வளர்ச்சி ஏற்படல்.
- அரசு வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமாதல்
- பொருளாதாரத்தின் உற்பத்தி வினைத்திறன் அதிகரித்தல். (2 புள்ளிகள்)

V.

- நடைமுறைக் கணக்கு மீதி (அரசு சேமிப்பு) மீது பாதக தன்மை ஏற்படல்
- முதலீட்டுக்காக செய்யப்படக்கூடிய செலவுகள் வரையறைக்குட்பட்டல்.
- வரவு செலவு திட்டம் மற்றும் சென்மதி நிலுவை என்பவற்றுக்கு அதிக சுமையாக அமைதல்.
- அரச நிதி முகாமைத்துவம் கடினமாக அமைதல.
- பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படல்
- கடன் சுமையை அதிகரித்தல் (1 வீதம் 4 புள்ளிகள்)

8.


**I.**


| **இலங்கை** | **சீனா** |
|---|---|
| 1 Kg தேயிலை : 2 உழைப்பு எனில் | 1 Kg தேயிலை : 4 உழைப்பு எனில் |
| 1 உழைப்பு : 1/2 Kg தேயிலை | 1 உழைப்பு : 1/4 Kg தேயிலை |
| 1 உழைப்பு : 0.5 Kg தேயிலை | 1 உழைப்பு : 0.25 Kg தேயிலை |
| அரிசி 1 Kg = 4 உழைப்பு எனில் | அரிசி 1 Kg = 2 உழைப்பு எனில் |
| 1 உழைப்பு = 1/4 அரிசி | 1 உழைப்பு = 1/2 அரிசி |
| 1 உழைப்பு = 0.25 அரிசி | 1 உழைப்பு = 0.5 அரிசி |

இரு நாடுகளினதும் உற்பத்தி தகவல்கள்

| பண்டம் | இலங்கை | சீனா |
|---|---|---|
| தேயிலை | 0.5 x 200 = 100 | 0.25 x 200 = 50 |
| அரிசி | 0.25 x 200 = 50 | 0.5 x 200 = 100 |

(a)




(சரியான ஒரு வரிப்படத்திற்கு 2 புள்ளி வீதம் 2 வரிபடங்களுக்கு 4 புள்ளிகள்)

(b)

இரு நாடுகளினதும் அமையச் செலவு

| பண்டம் | இலங்கை | சீனா |
|---|---|---|
| தேயிலை | 2/4 = 0.5 | 4/2 = 2 |
| அரிசி | 4/2 = 2 | 2/4 = 0.5 |

இலங்கை ஒரு கிலோ தேயிலையினை ஏற்றுமதி செய்து அரிசியில் 0.5 ஐ விட கூடுதலாகவும், 2 ஐ விட குறைவாகவும் வர்த்தக இடைவெளியில் (பரிமாற்ற இடைவெளி) நடவடிக்கை மேற்கொள்வதானது இலங்கைக்கு நன்மை பயக்கும். (2 புள்ளிகள்)


II.

- ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செலவு அதிகரித்தல்
- உள்நாட்டு உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக இறக்குமதிக்கான கேள்வி அதிகரித்தல்
- வெளிநாட்டு முதலாம் நிலை வருமானக் கொடுப்பனவுகள் அதிகரித்தல்
- நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை
- வரவு செலவு திட்ட பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்கு வெளிநாட்டு மூலங்களில் இருந்து கடன் பெறுவதற்கான வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் செலுத்தப்பட வேண்டிய வட்டி பெருமளவில் அதிகரித்தல்.

(1 புள்ளி)

III. மிதக்கும் நாணய மாற்று வீதம் செயல்படுத்தப்படும் பொருளாதாரங்களில் இறக்குமதிக்கான கேள்வி அதிகரிக்கும்போது டொலருக்கான கேள்வி D இருந்து D1 ஆக அதிகரிக்கின்றது. டொலரின் நிரம்பல் நிலையாக காணப்படும் சந்தர்ப்பத்தில் டொலரின் கேள்வி அதிகரிக்கும்போது வெளிநாட்டு நாணய மாற்று வீதம் தேய்வடைகிறது. இவ்வாறு செய்யும்போது ஏற்றுமதி ஊக்குவிக்கப்படும். இதனால் மீண்டும் டொலரின் நிரம்பலானது S இலிருந்து S1 ஆக அதிகரிக்க தொடங்கும். டொலரின் கேள்வி அதிகரிக்கும் வேகத்திலேயே டொலரின் நிரம்பலும் அதிகரிக்குமாயின் நாணயமாற்று வீதம் மீண்டும் நிலையான மட்டத்துக்கு வரும்.

**(விளக்கத்திற்கு 2 புள்ளிகள்)**




(வரிப்படத்திற்கு 2 புள்ளிகள்)

IV.

a. வியாபார கணக்கு வரவு, நிதி மற்றும் ஏனைய முதலீடுகள் கணக்கில் நாணயங்களும் வைப்புகளும் செலவு
b. சேவை கணக்கு வரவு, நிதி மற்றும் ஏனைய முதலீடுகள் கணக்கில் நாணயங்களும் வைப்புகளும் செலவு
c. முதல் நிலை வருமானக் கணக்கில் செலவு, நிதி மற்றும் ஏனைய முதலீடுகள் கணக்கில் நாணயங்களும் வைப்புகளும் வரவு
d. நிதிக்கணக்கு ஏனைய முதலீடுகள் செலவு (பொறுப்புக்கள் அதிகரித்தல்) நிதிக்கணக்கு ஏனைய முதலீடுகளில் நாணயங்களும் வைப்புகளும் செலவு

(1 வீதம் 4 புள்ளிகள்)

V.

- ஏற்றுமதி தொழிலாளர்களுக்கு மானியம் வழங்கல்
- ஏற்றுமதி பன்முகப்படுத்தல்
- ஏற்றுமதி ஊக்குவிப்பு வளையங்களை உருவாக்குதல்
- புதிய ஏற்றுமதி சந்தைகளை தேடிக்கொள்ளல்
- வர்த்தக ஒப்பந்தங்கள் செய்தல்
- ஏற்றுமதி வரிச்சலுகையை வழங்குதல்

9.

I.

- பேரினப் பொருளாதாரம் உறுதியை பேணுதல்
- உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்
- சேமிப்பு மற்றும் முதலீடு என்பவற்றை உயர்மட்டத்தில் வைத்திருத்தல்
- பூகோளமய பொருளாதாரத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்
- மனித மூலதனத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
- நெகிழ்வான உழைப்புச் சந்தை ஒன்றை உருவாக்குதல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறைகளில் முதலீடுகளை அதிகரிக்கச் செய்தல்
- ஏற்றுமதியை பன்முகப்படுத்தல்
- அரச தனியார் பங்குடைமையை அதிகரித்தல்

(ஒரு விடயத்துக்கு ஒரு புள்ளி வீதம் ஐந்து விடயங்களுக்கு 5 புள்ளிகள்)

II.

1. பொதுமக்கள்
2. புவி
3. சுபீட்சம்
4. சமாதானம்
5. பங்கு நடவடிக்கைகள்

(5 புள்ளிகள்)

III. கிராமியத் துறையின் வறுமையானது நகர்ப்புற வறுமையை விட உயர்வாக இருக்கக் காரணங்கள்

i. பத்து தசாப்தங்களுக்கு மேலாக காணப்பட்ட யுத்த சூழல் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச மக்களின் வறுமை நிலைக்கு நேரடி செல்வாக்கு செலுத்தி உள்ளது. பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் பணம் யுத்தத்திற்காக செலவிடப்பட,

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை தராமல் கைத்தொழில்கள் முன்னேற்றம் அடையாமை, உடற் குறைபாடுடையோர் விதவைகள் இடம்பெயர்ந்தோர் அதிகரித்தல் என்பன காரணமாக சமூக செலவுகள் அதிகரிப்பு என்பவற்றால் அப்பிரதேசங்களில் வறுமை நிலை அதிகரித்துள்ளது.

ii. அரசாங்க கொள்கைகளில் காணப்படும் குறைபாடுகளும் கிராமிய வறுமைக்கு காரணமாகியுள்ளது முறைசார் கடன் வசதிகளை பெற்றுக் கொள்ளும் போது பல்வேறு காரணங்களினால் கிராமிய மக்களுக்கு கடன் வசதி பெற்று கொடுக்கப் படுவதில்லை. அதேபோல் காப்புறுதி நடவடிக்கைகளை செயல்படுத்துவதிலும் குறைபாடுகள் உள்ளன. இதனால் நகர்ப்புற மக்களுக்கு இத்தகைய வசதிகளை பெற்றுக் கொள்வது இலகுவாக அமைந்தாலும் கிராமிய மக்களுக்கு வசதிகள் கிடைக்காமல் போவது வறுமைக்கு காரணமாகும்.

iii. நகர்ப்புறங்களை முதன்மைப்படுத்தி கொள்கைகள் செயற்படுவதனால் நகர்ப்புற வறுமை குறைவதோடு அவை கிராமிய பகுதிகளில் செயல்படுத்தப்படாமை கிராமிய வறுமையை தீவிரப்படுத்துகிறது.

iv. கிராமிய மக்கள் அதிகமாக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் ஏனைய மானியங்கள் மீது தேவைக்கு அதிகமாக தங்கியிருக்க பழகியுள்ளனர் உதாரணம் ஜனசவிய சமூர்த்தி இதனால் ஊக்குவித்தல் சுய உற்சாகம் என்பன மக்களிடமிருந்து இல்லாமல் போய் உள்ளதோடு போட்டித் தன்மையும் இல்லாமல் போயுள்ளது. இந்நிலைமை வறுமை அதிகரிக்க காரணமாகும்.

v. குறுங்கால அரசியல் நலன் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மானியம் வழங்கப்படுவதால் கிராமிய பிரதேசங்களில் நீண்டகால அபிவிருத்தி நோக்கம் மழுங்கடிக்கப்பட்டு உள்ளது இதுவும் ஒரு காரணமாகின்றது.

vi. வசதி குறைந்த வீடுகள் வசதி குறைந்த சுயநல நடவடிக்கைகள் குறைந்த மற்றும் கல்வி வசதிகள் மொழி பிரச்சனை சிறந்தவெளி தொடர்புகளின்மை சந்தைப் படுத்தும் திறன் கிராம மக்களிடம் இல்லாதிருத்தல் போன்றவையும் வறுமைக்கு காரணமாகின்றது.

vii. விசேடமாக கிராமிய மற்றும் பெருந்தோட்ட மக்களிடையே காணப்படும் போதைப்பொருள் மற்றும் மது பாவனை அடிப்படைத் தேவைகளை கருத்திற் கொள்ளாது வேறு தேவைகளுக்கு பணம் செலவிடல், ஒழுங்குமுறைகள் இன்மை, கடன் படும் நிலைமை, வீட்டு வன்முறை, பல்வேறு நோய்கள் போன்றன இம்மக்களின் வறுமை அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது

(ஒரு விடயத்துக்கு ஒரு புள்ளி வீதம் 5 புள்ளிகள்)

iv.

- ஒரு நாட்டின் உழைப்பு வளங்கள் பூரணமாக உற்பத்திக்கு பயன்படுத்தப்படாமல் இருப்பது குறை தொழில் மட்டம் என அழைக்கப்படுகின்றது. (1 புள்ளி)
- குறை தொழில் மட்டம் இரண்டு தன்மைகளைக் கொண்டுள்ளது (2 புள்ளிகள்)
- 1 கட்புலனாகும் குறை தொழில் மட்டம்
- 2 கட்புலனாகாத குறை தொழில் மட்டம்
- கட்புலனாகும் குறை தொழில் மட்டம் என்பது உற்பத்தியாளர்கள் வேலை செய்ய விரும்புகின்ற போதிலும் அதற்கு பொருத்தமாக வேலை கிடைக்காமை காரணமாக வேலையின் அளவு அல்லது வேலை குறைவடைவதனால் ஏற்படுகின்ற குறை தொழில் மட்டம் ஆகும். (2 புள்ளிகள்)

- கட்புலனாகாத குறைதொழில் மட்டம் என்பது உழைப்பாளர்கள் பெற்றுள்ள நிபுணத்துவ தொழில்களுக்கு பதிலாக அதை விட குறைந்த நிபுணத்துவ மட்டம் தேவைப்படும் தொழில்களில் ஈடுபடுதல் காரணமாக ஏற்படும் குறை தொழில் நிலையாகும்
- உதாரணமாக பட்டதாரி ஒருவர் அலுவலக உதவியாளராக செயற்படல்

(2 புள்ளிகள்)

10.

i.

- சேவை வழங்கல் வசதி மற்றும் சந்தை வசதியை மேலும் முன்னேற்றுதல்
- புதிய சந்தை கொள்கை ஒன்றை தயாரித்தல்
- போட்டி உற்பத்தி மற்றும் நிதிச் சந்தை மூலம் புதியவற்றை அதிகரித்தல்
- முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக கொள்கைகளைத் தயாரித்தல்
- உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல்
- தொழில்துறை பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுத்தல்

(1 விடயத்திற்கு 1 புள்ளி வீதம் 5 புள்ளிகள்)

ii.

- 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை 18% வீதத்தினால் குறைவடைந்தது
- எரிபொருள் பிரச்சினை மின்சாரம் துண்டிப்பு என்பன காரணமாக சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை செய்து கொடுப்பதில் வசதியின்மை
- அத்தியாவசிய பண்டங்களின் பற்றாக்குறையும் இறக்குமதி பண்டங்கள் குறைவடைந்தமையும்
- பணவீக்கம் அதிகரித்தல்
- ரஷ்ய உக்ரைன் பிரச்சனைகளால் சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைதல்
- சுற்றுலா கைத்தொழிலின் நிச்சயமற்ற தன்மையும் வேலைவாய்ப்பு இழக்கப்பட்டமையும் காரணமாக பயிற்சி பெற்ற ஊழியர்கள் வெளிநாடு செல்வதும் வேறு தொழிலுக்கு செல்வதும் காரணமாக பயிற்சி பெற்ற ஊழியர்கள் பற்றாக்குறை
- முறைசாரா துறை சுற்றுலாத்துறையினைக் கைப்பற்றிக் கொண்டமையால் நெறிமுறைகள் முறிவடைந்தது நாட்டின் சிறந்த பிரதிபிம்பம் இல்லாது போதல்.
- வலய நாடுகளில் போட்டித்தன்மை அதிகரித்தல்.
- நாட்டில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் திடீர் மாற்றங்கள் போன்ற கஷ்டமான நிலைமைகளால் சுற்றுலாத்துறை வதிவிட வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்வதற்கு பின்னிற்றலும் மேலதிக கொடுப்பனவுகள் இன்றி ரத்து செய்வதற்கு வசதி அளிக்கும் மற்றும் மாற்று தெரிவுகளில் பக்கம் சுற்றுலாப் பயணிகளின் கவனம் திரும்புதல்.
- இணைய வசதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் போதாமை

(1 விடயத்திற்கு 1 புள்ளி வீதம் 5 புள்ளிகள்)

iii.

- வீட்டிலிருந்து வேலை செய்வதன் நன்மைகள்
  - அலுவலகத்துக்கு செல்வதற்காக செலவழிக்கும் நேரம் மீதமாதல்
  - வீட்டில் எந்த ஒரு இடத்திலிருந்தும் வேலை செய்ய முடியும்
  - மற்றவர்களின் இடையூறின்றி கவனத்தை வேறு பக்கம் செலுத்தாமல் வேலை செய்ய முடியுமாதல்
  - தனது இலக்கினையும் பாதையையும் தயாரிப்பதற்கு எளிதாதல்